# அரியலூர் மாவட்டம்

# பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்ட விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், வேளாண்மைத்துறையின் சார்பில் திருந்திய பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் பற்றி விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு IFFCO-Tokio General Insurance Company Limited-ன் விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (14.12.2020) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளுக்கு நிதியுதவி வழங்கி பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதை ஊக்குவிக்கவும், தமிழ்நாட்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மத்திய அரசு 2020-2021 ஆம் ஆண்டு முதல் கடன் பெறும் விவசாயிகளை கட்டாயமாக பதிவு செய்து வந்த நிலையில் தற்போது அவர்களின் விருப்பத்தின் பேரில் பதிவு செய்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மத்திய மாநில அரசுகளின் சார்பாக காப்பீட்டு நிறுவனமான IFFCO-Tokio General Insurance Company Limited மூலம் அரியலூர் மாவட்டத்தில் திருந்திய பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் ராபி பருவம், 2020-21ல் செயல்படுத்த அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் ராபி பருவத்தில் நெல்- III பயிர் ஏலாக்குறிச்சி, திருமானூர், ஜெயங்கொண்டம், குண்டவெளி, ஆண்டிமடம், சுத்தமல்லி மற்றும் தா.பழூர் ஆகிய 7 குறுவட்டங்களிலும், மக்காச்சோளம் III பயிர் ஜெயங்கொண்டம், குண்டவெளி, உடையார்பாளையம், ஆண்டிமடம், கூவாகம், சுத்தமல்லி மற்றும் தா.பழூர் ஆகிய 7 குறுவட்டங்களிலும், உளுந்து பயிர் செந்துறை, பொன்பரப்பி, சு.ளு.மாத்தூர், திருமானூர், உடையார்பாளையம், ஆண்டிமடம், குவாகம், சுத்தமல்லி மற்றும் தா.பழூர் ஆகிய 9 குறுவட்டங்களிலும், எள் பயிர் நாகமங்கலம், ஏலாக்குறிச்சி, கீழப்பழூர், திருமானூர் சுத்தமல்லி மற்றும் தா.பழூர் ஆகிய 6 குறுவட்டங்களிலும், கடலை பயிர் அரியலூர், செந்துறை, ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் மற்றும் தா.பழூர் ஆகிய 5 வட்டாரங்களில் (திருமானூர் வட்டாரம் நீங்கலாக) உள்ள 12 குறுவட்டங்களிலும், கரும்பு பயிர் செந்துறை, ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் மற்றும் தா.பழூர் ஆகிய 4 வட்டாரங்களில் (அரியலூர் மற்றும் திருமானூர் வட்டாரங்கள் நீங்கலாக) உள்ள 10 குறுவட்டங்களிலும், அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

**விவசாயிகள் காப்பீட்டுக் கட்டணம் செலுத்துவதற்கான காலக்கெடு நெல் III பயிருக்கு 01.03.2021, உளுந்து பயிருக்கு 18.01.2021, மக்காச் சோளம் III, கடலை மற்றும் எள் பயிர்களுக்கு 15.02.2021 எனவும், கரும்பு பயிருக்கு 31.10.2021 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.** மேலும் பயிர் காப்பீட்டுத் தொகையில் நெல் III, மக்காச் சோளம் III, உளுந்து, கடலை மற்றும் எள் ஆகிய வேளாண் பயிர்களுக்கு 1.5 சதவீதம் மற்றும் வணிக பயிரான கரும்பு பயிருக்கு 5 சதவீதம் மட்டும் விவசாயிகள் செலுத்தினால் போதுமானது. அந்த வகையில் **ஏக்கருக்கு நவரை நெற்பயிருக்கு (நெல் III) ரூ.511.50 இதர பயிர்களான மக்காச்சோளம் III-க்கு ரூ.285, உளுந்துக்கு ரூ 192.15, கடலைக்கு ரூ.315.75, எள் பயிருக்கு ரூ.141.75 மற்றும் கரும்பு பயிருக்கு ரூ.2650 காப்பீட்டுக் கட்டணமாக செலுத்த வேண்டும்.**

எனவே ராபி பருவத்தில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள், தாங்கள் பயிர் கடன் பெறும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ தங்கள் விருப்பத்தின் பேரில் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களை காப்பீடு செய்துக் கொள்ளலாம். கடன் பெறா விவசாயிகள் நடப்பு பசலி ஆண்டுக்கான அடங்கலை கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று அதனுடன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது தேசிய வங்கிகளிலோ சென்று பதிவு செய்துக் கொள்ளலாம். மேலும் தற்போது கொரானா தொற்று நோய் தொடர்பாக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ள நிலையில், கடன் பெறா விவசாயிகள் பொது சேவை மையங்கள் மூலம் அனைத்து நாட்களிலும் பதிவு செய்துக்கொள்ளலம்.

எனவே விவசாயிகள் இயற்கை நிகழ்வு ஏற்படும் முன் இத்திட்டத்தில் தங்களது பயிர்களை பயிர் காப்பீடு செய்து பயனடையுமாறும், இதுக்குறித்தான மேலும் விபரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநரையோ அல்லது வேளாண்மை அலுவலரையோ அல்லது உதவி வேளாண்மை அலுவலரையோ தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக, அரியலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நில அளவைத்துறையின் சார்பில் நில ஆவண மேலாண்மை மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், கோட்டாட்சியர் ஜோதி, இணை இயக்குநர் (வேளாண்மை) பழனிசாமி, துணை இயக்குநர் பழனிசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) சண்முகம், உதவி இயக்குநர் (நிலஅளவை) து.ந.மணிவண்ணன், வட்டாட்சியர் சந்திரசேகரன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**